வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 15.12.2025 திங்கட்கிழமை | இதழ் : 349 | பக்கங்கள் : 08




# கந்தசாமிநகர், கூராய், மடுக்கரை மக்களுக்கு வேறிடங்களில் காணி

## ஆளும் கட்சியின் ஜெகதீஸ்வரன் எம்.பி



குமார. கோகுலன்
வவுனியா, டிசெம்பர் 15

பேரிடரால் பாதிக்கப்பட்ட வவுனியாவின் கந்தசாமிநகர், மன்னாரின் மடுக்கரை, கூராய் கிராமங்களின் மக்களுக்கு வேறு இடங்களில் காணிகளை இனங்கண்டு, அவர்களை அங்கு குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வனவளங்கள் திணைக்களம், அரச அதிபர்கள் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் விரைவாகக் காணிகளை இனங்கண்டு அந்தக் கிராமங்களின் மக்களை குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி பணித்துள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

வவுனியாவில் நேற்றைய தினம் அவர் தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே ஜெகதீஸ்வரன் எம். பி. இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அத்துடன், “எமது அரசாங்கம் மக்களின் அரசாங்கம் என்ற வகையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை காலமும் எந்த அரசாங்கமும் செய்யாத அளவில் நிவாரணங்களை அள்ளி வழங்கியுள்ளது. நிச்சயமாக இது மக்களுக்கு காத்திரமாக இருக்கும். வரும் காலங்களிலும் அந்த மக்களை கைவிடாமல் கண்காணித்து அவர்களின் பிரச்னைகளை தீர்த்து வைப்போம்.

“வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளுக்கு இந்த வருடம் மேலதிக நிதி வழங்குவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. அதற்காக வருகின்ற 18,19ஆம் திகதிகளில் விசேட பாராளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது.

“மன்னாரில் 70 வீடுகள்

07

# பேரிடர் மீட்பில் ஈடுபட்ட இந்திய, அமெரிக்க படைகள் தமது நாட்டுக்கு புறப்பட்டன



கொழும்பு, டிசெ. 01

நாட்டில் ஏற்பட்ட பேரிடரைத் தொடர்ந்து மீட்பு, நிவாரண பணிகளில் ஈடுபட்டிருந்த இந்திய, அமெரிக்க படைகள் நேற்றைய தினம் தமது நாட்டுக்கு புறப்பட்டன.

மீட்பு, நிவாரண பணிகளுக்காக இரு ஹெலிகொப்ட ர்கள், நிவாரண பொருட்களுடன்

07

# பயங்கரவாத எதிர்ப்பு சட்ட தயாரிப்பு பணிகள் நிறைவு

கொழும்பு, டிசெ. 15

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக முன்மொழியப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் தயாரிப்பு பணிகள் நிறைவடைந்து விட்டன என்று அறிய வருகிறது.

இதன்படி, இந்த சட்டத்தின்கீழ் பயங்கரவாத செயலைச் செய்பவர்களுக்கு மேல் நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் வகையில் ஏற்பாடுகள் உள்ளன.

07

# முகாம்களில் தங்கியுள்ள மக்கள் 2 மாதங்களில் குடியமர்த்தப்படுவர்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்

கொழும்பு, டிசெ. 15

“பேரிடரால் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் 7 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். செல்வதற்கு வேறிடமற்ற இவர்களை 2 அல்லது 3 மாதங்களுக்குள் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்”, என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

பேரிடரால் 6 ஆயிரத்து 138 வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ளன. அந்த மக்களை

07

# பேரிடர் இறப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பு

## வழக்கு தொடர்வது குறித்து எதிர்க்கட்சிகள் உரையாடல்

கொழும்பு, டிசெ. 15

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பேரிடரால் மக்கள் உயிரிழந்தமைக்கு முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரியமுறையில் கவனத்தில் கொள்ளத் தவறியமையே காரணம் என்று குற்றஞ்சாட்டி அரசாங்கத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு

07

# பேரிடர் பலி 644ஆக உயர்வு

கொழும்பு, டிசெ. 15

அண்மையில் ஏற்பட்ட பேரிடரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 644ஆக உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதேநேரம், 183 பேர்

07

# டித்வா புயல் தாக்கத்தால் 22 இலட்சம் மக்கள் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 15

நாட்டை தாக்கிய டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 22 இலட்சம் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17 இலட்சமாகும் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்துள்ளார்.

இதேநேரம்,

07

# நாட்டின் மீள்கட்டமைப்புக்கு 340 கோடி ரூபாய் சேர்ந்தது!

கொழும்பு, டிசெ. 15

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்ட நிதியத்துக்கு சேர்ந்த நிதி 340 கோடி ரூபாயை கடந்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் நாட்டை டித்வா சூறாவளி தாக்கியது. இந்த சூறாவளியால் 643 பேர் உயிரிழந்தனர். 184 பேர் காணாமல் போயினர். சுமார் 700 கோடி டொலருக்கும் அதிகமான பொருளாதார இழப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், நாட்டை மீளக் கட்டியெழுப்பும் செயல் திட்டத்துக்காக

07

# நிவாரண விநியோகம் வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, டிசெ. 15

அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரண நிதிகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது

07

# பேரிடர் நிவாரண பணியில் ஆளும் கட்சியினர் தலையீடு

## கொழும்பு ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 15

பேரிடர் நிவாரண விநியோக நடவடிக்கைகளில் ஆளும் கட்சியினர் தலையிடுகின்றனர். தங்கள் ஆதரவாளர்களின் நலனுக்காக அரச நிவாரண நிதியைத் திருப்பி விடுகின்றனர் எனவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன என்று கொழும்பின் பிரபல ஆங்கில நாளிதழ் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

“பேரிடர் நிவாரணமும் அதிர்ச்சியளிக்கும் குற்றச்சாட்டுகளும்“ என்ற தலைப்பில்

07

# பொறுப்புமிக்க மனிதவளத்தை உருவாக்குவதே எமது தேவை!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 15

சுற்றுச்சூழலை நேசிக்கும், அதனை பாதுகாப்பதில் முன்னிற்கும், தலைமைத்துவ பண்பு கொண்ட, கருணை மற்றும் கூட்டுமுயற்சி பற்றிய உணர்வுள்ள, ஜனநாயகத்தை மதிக்கும் பொறுப்புமிக்க மனித வளத்தை

07

# ஜனாதிபதி அநுரவுடன் அவசர சந்திப்புக்கு மனோ கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

மலையகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள அனர்த்த சவால்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் அவசர சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் எம். பியுமான மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மலையக பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் பிரச்னைகள்,

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரால் பாதித்த எமக்கு உதவிகள் கிடைக்கவில்லை!

## நாவற்காடு கிராம மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவு - முள்ளியவளை - நாவற்காடு கிராம மக்கள் பேரிடரால் பாதிக்கப்பட்ட தமக்கு எந்த உதவிகளும் கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், தமது கிராம சேவகர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் எதனையும் பார்வையிடவில்லை என்றும் நிவாரணம் வழங்குவதிலும் முறைகேடு நடைபெறுகிறது எனவும் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளனர்.

மேலும், இது தொடர்பில் கேள்வி எழுப்புபவர்களை பொலிஸார் மூலம் மிரட்டுகி றார் என்றும், அவ்வாறு செயல்பட்ட இருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாவற்காடு கிராமத்தில் 385 குடும்பங்கள் வசிக்கின்றன. பாதிக்கப்பட்ட எமக்கு உடனடித் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# முத்துஐயன்கட்டு குளத்தின் அணை உடைப்பெடுக்கும் அபாயம் இல்லை

## நேரில் பார்வையிட்ட அரச அதிபர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 15

முத்துஐயன்கட்டுகுளம் உடைப்பெடுக்கும் அபாயம் என்று பரவிய தகவல் வதந்தியே. இது தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று நேற்று அந்தக் குளத்தை பார்வையிட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

முத்துஐயன்கட்டு குளம் உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளது என்று பரவிய தகவல்களை தொடர்ந்து நிலைமையை அவதானிப்பதற்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவட்ட அரச அதிபர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிமனையின் உதவி பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் ஆகியோர் நேற்றைய தினம் அங்கு சென்றிருந்தனர்.

குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதியில் கட்டமைப்பு சேதமடைந்துள்ளது. தற்போது அதிக நீர் இருப்பின் காரணமாக அங்கு கொங்கிறீட் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. மேலும், கனரக வாகனங்களை அந்தப் பகுதிக்கு கொண்டு செல்லவும் முடியாததால் திட்டமிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்வரும் மழையை கருத்தில் கொண்டு, தற்போதுள்ள ரேடியல் கதவுகள் மூலம் குளத்தின் நீர்மட்டத்தை 20 அடி வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. திர்காலத்தில் கனமழை பெய்யும் சூழல் ஏற்பட்டால், வால் பகுதியை வெட்டி கூடுதல் நீரை வெளியேற்றும் மாற்றுத் திட்டமும் தயாராக உள்ளது. தற்போது நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்ந்து குளத்தை கண்காணித்து வருகிறது. எதிர்கால மழை நிலவரத்தை கருத்தில் கொண்டு அபாயத்தை குறைக்கும் நோக்கில் இந்த நீர்மட்டக் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, குளத்தின் கீழ் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பதற்றம் அடைய வேண்டாம். குளத்தின் அணையில் எந்தப் பிரச்னையும் இல்லை. பிரச்னை நீர் வழிந்தோடும் பகுதியில் மட்டுமே உள்ளது என்றும் அரச அதிபர் மேலும் கூறினார். (ஐ)

# அன்ரன் பாலசிங்கத்துக்கு வவுனியாவில் அஞ்சலி!



வவுனியா, டிசெ. 15

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் 19ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வவுனியா - திருநாவற்குளத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத்தால் ஏற்ப்பாடு செய்யப்பட்ட இந்தநிகழ்வில் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பொதுமக்கள்,நலன் விரும்பிகள், போராளிகளின் குடும்பங்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ஐ)

# பேரிடரில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக விசேட பூசை




யாழ்ப்பாணம், டிசெ. 15

டித்வா புயல் தாக்கத்தையடுத்து நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைந்து இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டியும் கோண்டாவில் சபரிமலை சபரீச ஐயப்பன் ஆலயத்தில் விசேட பூசை நடை பெற்றது.

நேற்று முன்தினம் விசேட புஷ்பாபிஷேகம் மற்றும் புஷ்ப அலங்கார பூசைகள் பக்தி பூர்வமாக நடைபெற்றன. இதில், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# கொமர்ஷியல் வங்கியால் பாடசாலை சிரமதானம்!



யாழ்ப்பாணம், டிசெ. 15

பேரிடரின் பின்னர் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. இதனை முன்னிட்டு, பாடசாலைகளை தூய்மைப்படுத்தும் பணியில் கொமர்ஷியல் வங்கியும் இணைந்துள்ளது.

கொமர்ஷியல் வங்கியின் திருநெல்வேலி கிளையினர் நேற்றைய தினம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வங்கிகளும் பாடசாலையும் எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த சிரமதானப் பணியில் கொமர்ஷியல் வங்கியின் திருநெல்வேலி கிளையினருடன் பாடசாலை சமூகத்தினரும் பங்கேற்றிருந்தனர். (ஐ-05)

# அரச வரி வருமானம் 4000 பில்லியன் ரூபா

கொழும்பு, டிசெ. 15

2025 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களுக்குள் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 4,033 பில்லியன் ரூபாய் என நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் ஊடாக 1,809 பில்லியன் ரூபாயும், இலங்கை சுங்கம் ஊடாக 1,970 பில்லியன் ரூபாயும், மதுவரித் திணைக்களம் ஊடாக 192 பில்லியன் ரூபாயும் வரி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதுடன், ஏனைய வழிகளில் 62 பில்லியன் ரூபாயும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

நிதி அமைச்சின் தகவல்களின் படி, 2025 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில், வாகன இறக்கு மதி மூலம் ஈட்டப்பட்ட வரி வருமானம் 302 பில்லியன் ரூபாயால் அதிகரித்துள் ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் வாகன இறக்குமதி வரி வருமானம் 48 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் 350 பில்லியன் ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

அரசாங்கத்தின் வரி வருமானத்துக்கு அதிகபட்ச பங்களிப்பு வற் வரியின் ஊடாக கிடைத்துள்ளதுடன், அது 1,615 பில்லியன் ரூபாயாகும்.

இதற்கு மேலதிகமாக வருமான வரி மூலம் 1,167 பில்லியன் ரூபாயை 2025 ஜனவரி - ஒக்ரோபர் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள அரசாங்கத்துக்கு முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அன்ரன் பாலசிங்கத்தின் 19ஆவது நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், டிசெ. 15

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வேலணை - வங்களாவடி பொது நினைவு சதுக்கத்தில் நேற்று நடைபெற்றது.

தீவக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் ஆரம்பமான இந்த நினைவேந்தல் நிகழ்வில் தேசத்தின் குரலின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, ஈகைச் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உப - தவிசாளர், பொதுமக்களும் இணைந்து கொண்டனர்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மதியுரைஞராகவும் தத்துவாசிரியராகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாவிட்டபுரம் இந்து மயான அபிவிருத்திக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், டிசெ. 15

வலி. வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மாவிட்டபுரம் இந்து மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான முதல் கட்ட பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை. ஆரம்பிக்கப்பட்டன.

மயான முகப்பு வளைவு மற்றும் இளைப்பாறல் மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வலி வடக்கு பிரதேச சபை செயலாளர் சி. சிவானந்தன், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆ. உதயசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர் ஆ. உதயசங்கரின் ஏற்பாட்டில் மாவை பாரதி சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.12.2023 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தன்னிலை அறிதல் அரசியலுக்கு அழகு

சில தினங்களாக மலையக தமிழ் மக்களுக்கு வடக்கு, கிழக்கில் காணி வழங்குவது தொடர்பில் பேசப்படுகிறது. இதனை ஆரம்பித்து வைத்தவர் தமிழர் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆவார். அதனைத் தொடர்ந்து அவர்களை வரவேற்கத் தயாராக இருப்பதாக தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார். மலையக மக்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றுவது என்பது அடிப்படையில் ஒரு சாதாரணமான திட்டம் இல்லை. அரசாங்கத்தால்தான் அவ்வாறான குடியேற்றங்களை மேற்கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் காணிப்பிரச்னையே தமிழ் அரசியல்வாதிகளால் தீர்க்க முடியாமல் இருக்கிறபோது, எவ்வாறு மலையக மக்களின் காணிப்பிரச்னையைக் கையாள முடியும். ஒருவேளை தனியார் காணியை வழங்க எவரேனும் முன்வந்தாலும் அவர்களை எந்த அடிப்படையில் குடியேற்றுவது - அதற்கான அரசாங்க அனுமதிகளை எவ்வாறு பெறுவது. ஒரு காலத்தில் வடக்கு, கிழக்கின் மக்கள் தொகையை அதிகரிக்க வேண்டும் என்னும் நோக்கில் புளொட் இவ்வாறான குடியேற்றங்கள் தொடர்பில் பணியாற்றியிருந்தது.

காந்தியம் ஊடாக பல இடங்களில் மலையக மக்கள் குடியேற்றப்பட்டனர். அவ்வாறு குடியேற்றப்பட்ட மக்கள் பின்னர் இடம்பெற்ற இன வன்செயல்களின் போது முதலில் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருந்தனர் என்றும் குற்றச் சாட்டுகள் உண்டு. இவ்வாறான பின்னணி இருக்கின்றபோது இப்போது ஏதோ புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட விடயம் போன்று மலையகத் தமிழ் மக்கள் தொடர்பில் பேசுவதானது அரசியலில் பரப்பரப்பை ஏற்படுத்தப் பயன்படுமே தவிர, வேறு எந்தவொரு பயனையும் ஏற்படுத்தப் போவதில்லை.

முதலில் இவ்வாறான விடயங்களைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் நிலை தொடர்பில் சிந்திக்க வேண்டும் - தாங்கள் பேசும் விடயங்களை எந்தளவுக்குத் தனியாக முன்னெடுக்க முடியும் என்பது பற்றி யோசிக்க வேண்டும். தமிழ் அரசியல் தலைமைகளால் தங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒரு சிறிய பகுதியைக் கூட இதுவரையில் செயலில் நிரூபிக்க முடியவில்லை. இந்த நிலையில் இன்னொரு மக்கள் கூட்டத்தை வடக்கு, கிழக்குக்கு வாருங்கள் - நாங்கள் வாழவைக்கிறோம் என்பது எந்தளவு புத்திசாதுர்யமானது?

தமிழ் அரசியல் தலைமைகள் முதலில் ஊடக விளம்பரங்களுக்காகக் கதைப்பதை விடுத்து, தங்களின் ஆற்றல் அறிந்து பேசுவது முக்கியம். அரசியலில் எப்போதும் தன்னிலை அறிவது அவசியம். ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் தன்னிலை அறியாத காரணத்தால்தான் பல இடங்களில் சறுக்கி விழ நேர்ந்தது. தொடர்ந்தும் ஆரம்பிக்கும் இடத்திலேயே தமிழர் அசியல் முடிகிறது. தன்னிலை அறியாமையே இதற்கான பிரதான காரணம்.

# நத்தார் பண்டிகையையொட்டி விசேட பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 15

எதிர்வரும் நத்தார் பண்டிகையையொட்டி நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய மேல் மாகாணத்தில் மாத்திரம் 2500இற்கும் மேற்பட்ட மேலதிக பாதுகாப்பு அதிகாரிகள் பணியமர்த்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் எவ். யு. வுட்லர் தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டிசெம்பர் மாதம் எதிர்வரும் வாரங்களில் அனைவரும் பண்டிகை காலத்தினுள் நுழைகிறோம். பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் சுற்றுலாப் பயணங்கள், யாத்திரைகள் போன்ற சுற்றுலாவுக்காக குடும்பமாக வெளியிடங்களுக்கு பயணிக்கின்றனர். வழிபாடுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வெளிமாவட்டங்களுக்கு செல்வோர் தமது வீடு, நிறுவனங்கள் தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறு வலியுறுத்துகிறேன்.

அத்தோடு எதிர்வரும் நத்தார் பண்டிகையையொட்டி நாடளாவிய ரீதியில் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு மக்கள் அதிகளவில் சஞ்சரிக்கும் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பொலிஸார், முப்படையினர், அதிரடிப் படைப்பிரிவினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். குறிப்பாக இம்முறை மேல் மாகாணத்தில் மாத்திரம் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட மேலதிக பாதுகாப்பு அதிகாரிகள் பணியமர்த்தப்படவுள்ளனர்.



மேலும், நாட்டில் சுற்றுலாவுக்காக மக்கள் அதிகளவில் வருகை தரும் நீர் நிலைகள் அமைந்துள்ள 43 பகுதிகளில் உயிர் பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பழக்கமில்லாத மற்றும் அவதானம் மிக்க பகுதிகள் என அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கிறேன். -என்றார். (எ)

# அத்தியாவசிய உணவு பொருட்களின் விநியோகத்தை உறுதி செய்ய முடிவு

கொழும்பு, டிசெ. 15

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளையடுத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகத்தை உறுதி செய்தல் மற்றும் அவற்றின் விலைகளை ஸ்திரப்படுத்துவது குறித்து உணவுப் பாதுகாப்புக் குழு கூடி ஆராய்ந்துள்ளது.

வர்த்தக,உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கூடிய இக்குழு இதுபற்றி ஆராய்ந்துள்ளது.


சூறாவளி அனர்த்தத்தால் மரக்கறி பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் முக்கிய உணவுப் பொருட்கள் தொடர்பில் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், அவற்றின் விலைகள் அதிகரிப்பதை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்கள் அதிகாரிகளுடன் இதன்போது விரிவாக கலந்துரையாடினர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலையை பயன்படுத்தி சில வர்த்தகர்கள் விவசாய நிலங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதத்தை காரணமாகக் காட்டி, உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்த முயற்சித்து வருகின்றனர். இது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதுபோன்ற நடைமுறைகளைக் கட்டுப்படுத்தவும், நிலையான சந்தை விலைகளை உறுதி செய்யவும் இக்குழு நடவடிக்கை எடுக்க இணக்கம் தெரிவித்தது.

இதன் பயனாக, உள்நாட்டு விநியோகத்தில் அழுத்தத்தைக் குறைக்கும் வகையில், அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறும். அரசால் அனுகூலம் உண்டு.

**இடபம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட் களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள்.

**துலாம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். ஆதாயம் தரும் நாள்.

**விருட்சிகம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்மறை சிந்தனைகள் பிறக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக போய் முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மீனம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# "சுற்றுலாத்துறை திட்டங்கள் தயாரிப்பின்போது சமூகத்தின் பலதரப்பட்டவர்களை உள்ளடக்குக"

யாழ்ப்பாணம், டிசெ. 15

சுற்றுலாத்துறைக்கான திட்டங்கள் தயாரிக்கும் போது சமூகத்தின் பலதரப்பட்ட பங்குதாரர்களை உள்ளடக்கி அவர்களின் ஆலோசனைகளை பெற்று தயாரிப்பதே பொருத்தமானதாக அமையும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

வட மாகாண சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பாக கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கிலான பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சுற்றுலாத்துறை அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக, வட மாகாண சுற்றுலாப் பணியகம் மாகாணத்துக்கான சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தை வவுனியா பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இதனடிப்படையில் சுற்றுலாப் பணியகமும் தயாரிப்பு குழுவும் மாவட்டம் தோறும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி அம் மாவட்டங்கள் தொடர்பான வளங்கள், சவால்கள் தொடர்பான உள்ளீடுகளை பெற்று வருவதற்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் கூறுகையில், யாழ். மாவட்டத்தின் சுற்றுலாத்துறை பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியிலே அதனுடைய செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதனடிப்படையில், வட மாகாணத்துக்கான சுற்றுலா தொடர்பான அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு யாழ்ப்பாணம் மாவட்டம் மிக முக்கியமான சுற்றுலா மையமாக உள்ளது. மேலும், யாழ். மாவட்டத்தின் சுற்றுலா துறையை மேம்படுத்தும் வகையில் சிறந்த திட்டங்களை உருவாக்கி ஒழுங்குபடுத்தி, அதன் ஊடாக மாவட்டத்தின் சுற்றுலா துறையை மேம்படுத்துவதன் ஊடாக மக்களுடைய

வாழ்க்கை தரத்தையும், வாழ்வாதாரத்தையும் அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

ஏனைய இடங்களிலிருந்து வருகின்றவர்களுக்கான ஒரு சிறப்பான ஒரு சுற்றுலா மையமாக யாழ். மாவட்டத்தை மாற்றுவதற்கான ஒரு தந்திரோபாய திட்டத்தை வகுக்கும் பயிற்சிப் பட்டறையாக இதனை பயன்படுத்த வேண்டும் எனவும், வட மாகாணத்துக்கான ஒரு சுற் றுலா அபிவிருத்தி திட்டத்தை சிறந்த முறையில் உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பயிற்சிப் பட்டறையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் கூறுகையில், சுற்றுலாத்துறைக்கான 05 ஆண்டுத் திட்டங்கள் தயாரிக்கும் போது சமூகத்தின் பலதரப்பட்ட பங்குதாரர்களை உள்ளடக்கி அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று தயாரிக்க வேண்டும். இதன் மூலமே திட்டங்கள் வினைத்திறனாக அமையும் எனவும் தெரிவித்தார். மேலும், இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்ட திட்டங்களை மாதிரித் திட்டங்களாக தயாரித்து, மீண்டும் பொருத்தமான பங்குதாரர்களுடன் சேர்ந்து ஆராய்ந்து இறுதி செய்வதே பொருத்தமாக அமையும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (எ)

## வத்திராயன் மக்களுக்கு நிவாரணம் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில், வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட மக்கள், அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பன வுக்குள் உள்வாங்கப்பட வில்லை எனவும், கிராம அலு வலர், மக்களைப் பதிவு செய்ய வில்லை எனவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ள னர்.

அத்துடன், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, வசதியான குடும்பங்களுக்கு உதவிகள் வழங் கப்படுவதாகவும், தொடர்ச் சியாக, கிராம அலுவலர் தம்மை புறக்கணித்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவில் விபத்து: இளைஞன் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை வீதியில் கடந்த 09ஆம் திகதி இடம் பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இரணைப்பாலையைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, அதே திசையில் பயணித்த கனரக வாகனமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது, பலத்த காயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இவர், இரணைப்பாலை சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட வீரராகவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் உதைபந்தாட்ட நடுவராகவும் செயல்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனமும் அதன் சாரதியும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, வீதி போக்குவரத்து பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சாரதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (எ)

# காங்கேசன்துறை இந்து மயானத்தை மீட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 15

காங்கேசன்துறை இந்து மயானத்தை விடுவித்து தருமாறு அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில், நேற்று முன் தினம் சனிக்கிழமை பாராளு மன்ற உறுப்பினர் எஸ். சிறீப வானந்தராஜா, அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மயானத்தை மீள பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக உறுதி யளித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு கால பகுதியில் யுத்தம் காரணமாக காங்கேசன்துறை பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலை யில் சுமார் 25 வருடங்களுக்கு பின்னர் அப்பகுதிகளில் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றங்கள்இடம்பெற்றன.



இதன்போது, காங்கேசன்துறை இந்து மயானம் அமைந்துள்ள காணியும், அதனைச் சூழவுள்ள காணிகளும் விடுவிக்கப்படாது, உயர் பாதுகாப்பு வலயத்தினுள்இருந்த நிலையில், தற்போது அப்பகுதி அனைத்தும் துறை முக அதிகார சபையின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட் டுள்ளது.

இதனால், அப்பகுதி மக்கள் இந்து மயானத்தை விடுவித்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாக சுமார் 10 வருட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து பார்வையிட்டார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13,698 வணிக முயற்சிகள் பேரிடரால் பாதிக்கப்பட்டன

கொழும்பு, டிசெ. 15

நாட்டில் ஏற்பட்ட பேரிடரால் 13 ஆயிரத்து 698 வணிக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கைத்தொழில் பேரிடர் ஆதரவு மையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 5 ஆயிரத்து 639 மிகச்சிறிய வணிகங்களும் 4 ஆயிரத்து 636 சிறிய வணிகங்களும் 2 ஆயிரத்து 986 நடுத்தர அளவிலான வணிகங்களும், 437 பெருமளவிலான வணிகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, பாதிப்புக்குள்ளான வணிகங்கள் தொடர்பில், 071 266 6660 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்புகொண்டு அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# போதைப்பொருட்களுடன் 878 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 15

நாடு முழுவதும் போதைப் பொருளை தடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 878 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, 2 கிலோ 605 கிராம் ஹெரோயின், 619 கிராம் ஐஸ், ஒரு கிலோ 127 கிராம் கஞ்சா, 25 ஆயிரத்து 161 கஞ்சா செடிகள், 05 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 82 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 266 போதை மாத்திரை கள், 91 கிராம் 70 மில்லிகிராம் மதன மோதகம் மற்றும் 02 கிலோ கிராம் 244 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான 878 சந்தேகநபர்களில் 16 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாவர். 4 பேர் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பேரிடரால் 6,164 வீடுகள் முழுமையாக அழிந்தன

கொழும்பு, டிசெ. 15

பேரிடரால் நாடு முழுவதும் 6 ஆயிரத்து 164 வீடுகள் முழுமையாக அழிவடைந்தன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையம் நேற்று வெளியிட்ட தரவு அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பேரிடரால் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 110 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

23 ஆயிரத்து 41 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 911 பேர் இன்னமும் 796 பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# அண்ணனை கொட்டனால் அடித்துக் கொன்ற தம்பி!

கொழும்பு, டிசெ. 15

சகோதரர்களின் சண்டையில் அண்ணனை கொட்டன் தடியால் தாக்கி கொன்ற குற்றச்சாட்டில் தம்பியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் - பமுனுகம - சேதவத்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதான நபர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் அவரின் சகோதரருக்கும் இடையே நீண்டகாலமாக நிலவி வந்த முரண்பாடே கொலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஐ)

# கொழும்பு புறநகர குப்பைகள் 10 நாட்களுக்குள் அகற்றப்படும்

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

கொழும்பு, டிசெ. 15

டித்வா சூறாவளியின் தாக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் கொழும்பு புறநகர் பகுதிகளில் குவிந்துள்ள குப்பைகள் சுமார் 10 நாட்களுக்குள் முழுமையாக அகற்றப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் திலக் ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பகுதியில் மாத்திரம் சுமார் 8 ஆயிரத் தொன் குப்பைகள் குவிந்துள்ளன. இரு நாட்களில் அதை அகற்ற முடியும் என்றும் அவர் கூறினார்.

மேலும், கொட்டிகாவத்தை, முல்லேரியா போன்ற பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் தொன் குப்பைகள் குவிந்துள்ளன. தற்போது, மேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை நாள் ஒன்றுக்கு சுமார் 100 லொறிகளை அனுப்பி மிகவும் வெற்றிகரமான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இவை அனைத்தையும் சுமார் 10 நாட்களில் முடித்துவிடுவார்கள் என நினைக்கிறேன். ஆனால், குப்பை உற்பத்தி எப்போதும் நடந்துகொண்டே இருக்கிறது. ஏனென்றால் சில வீடுகள் மற்றும் வணிக இடங்கள் இன்னும் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. அனர்த்தத்துக்குப் பின்னர் இது ஒரு பேரழிவு என்றும் கூறினார். (ஐ)

# துப்பாக்கி மீட்பு

கொழும்பு, டிசெ. 15

ஜா-எல - ஜெயமாவத்தை பகுதியில் வீடொன்றின் அருகே வெளிநாட்டு துப்பாக்கி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை முன்தினம் மாலை இந்தத் துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டது.

துப்பாக்கியை அந்த இடத்தில் விட்டுச் சென்றவர் யார் என்பது குறித்து ஜா-எல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

கொழும்பு, டிசெ. 15

புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை - தனமல்வில - பட்டுவேவ பகுதியில் நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தனமல்வில பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமையவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள், 45 முதல் 58 வயதுக்குட்பட்ட ஹிங்குராண, அம்பலாந் தோட்டை, மஹாவேவ பகுதிகளை சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பு துறைமுகத்தின் எண்ணெய் குழாயில் கசிவு



கொழும்பு, டிசெ. 15

கொழும்பு துறைமுகத்தில் கப்பலில் இருந்து மசகு எண்ணெயை இறக்கும் குழாயில் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படை மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை ஆகியன இணைந்து, கடலில் கசியும் எண்ணெயை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 2.3 கிலோ ஹெரோயினுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 15

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 2 கிலோ 300 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைதானவர் கேகாலை - ரம்புக்கனையைச் சேர்ந்த 28 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபர் மலேசியாவிலிருந்து வருகை தந்திருந்தார். அவரை நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அனர்த்த முகாமைத்துவ கொள்கையில் மாற்றம் அவசியம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ



மாத்தளை, டிசெ. 15

நாட்டின் அனர்த்த முகாமைத்துவ கொள்கையை புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாத்தளை மாவட்ட மக்களின் சுக துக்கங்களை ஆராயும் நோக்கில் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் மாத்தளை, ரத்தோட்டை கைகாவல பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சஜித் மேலும் கூறுகையில்,

பாதிக்கப்பட்ட மக்களை பராமரிப்பதும் பாதுகாப்பதும் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இயற்கை பேரிடர்கள் மற்றும் அனர்த்தங்கள் நிகழும் போது அவற்றிலிருந்து வரும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் பேரிடரின் போது எடுக்கப்பட்டதா? இல்லையா? என்பது கேள்விக்குறியாகவே இன்றுவரை காணப்படுகின்றன.

வளிமண்டலவியல் திணைக்களமும், வானிலை ஆய்வாளர்களும் கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் வானிலை நிலைமை படிப்படியாக மோசமடைந்து வருவதாக படிமுறை படிமுறையாக நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்து வந்தனர்.

10 நாட்களில் இது புயலாக உருவெடுக்கும் என்றும் முன்னறிவித்தல் விடுத்திருந்தனர். இந்தக் காலகட்டத்தில், மக்களை வெளியேற்றவும், மக்கள் மீது வரும் பாதிப்புகளைக் குறைக்கவும், அனர்த்த முன்னாயத்தத் திட்டங்களை முன்னெடுக்கவும், அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை, பிரதேசங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் இயலுமை காணப்பட்டிருந்த போதிலும், இதனை எதிர்கொள்வதற்குத் தேவையான இடர் முகாமைத்து திட்டமொன்று இந்த அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

ஆகையால் நாட்டுக்கு புதிய இடர் முகாமைத்துவ வேலைத் திட்டமொன்று அவசியம் என்று சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (எ)

# 36 பிரதான நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான 36 பிரதான நீர்த்தேக்கங்களும், 46-க்கும் அதிகமான நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் எச்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்தார்.

மாவட்ட ரீதியாக வான் பாயும் நீர்த்தேக்கங்களின் விவரம் பின்வருமாறு:

அநுராதபுரத்தில் அனைத்துப் பிரதான நீர்த்தேக்கங்களும் வான் பாய்கின்றன.

அம்பாறையில் 9 இல் 3 நீர்த்தேக்கங்களும், பதுளையில் 7 இல் 3 நீர்த்தேக்கங்களும்,

மட்டக்களப்பில் 4 இல் 3 நீர்த்தேக்கங்களும்,

அம்பாந்தோட்டையில் 10 இல் 4 நீர்த்தேக்கங்களும், கண்டியில் 3 இல் 2 நீர்த்தேக்கங்களும், குருநாகலில் 10 இல் 4 நீர்த்தேக்கங்களும்,

மொனராகலையில் 3 இல் ஒரு நீர்த்தேக்கமும்,

பொலநறுவையில் 4 இல் 2 நீர்த்தேக்கங்களும்,

திருகோணமலையில் 5 இல் 3 நீர்த்தேக்கங்களும்,

மன்னாரில் 4 இல் ஒரு நீர்த்தேக்கமும் வான்பாய்கிறது.

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளைத் திறப்பதன் மூலம் தற்போது வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைந்தபட்ச மட்டத்திலேயே காணப்படுவதாக பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தற்போது வெளியேற்றப்படும் நீரினால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயமோ அல்லது நீர் மட்டம் அதிகரிப்பதோ அவதானிக்கப்படவில்லை என்றாலும், தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் நீர் வெளியேற்றப்படுவது தொடர்பான அறிவிப்புகள் குறித்து தீவிர அவதானத்துடன் இருப்பது மிக முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# பல இடங்களில் கடும் காற்று வீசும்

கொழும்பு, டிசெ. 15

நாட்டின் பல இடங்களில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (எ)

# 5700 இற்கும் மேற்பட்ட வீடுகள் பேரிடரால் முழுமையாக சேதம்

## கண்டி, நுவரெலியாவில் அதிகம்

கொழும்பு, டிசெ. 15

சமீபத்தில் ஏற்பட்ட கடுமையான வானிலை காரணமாக 5,700 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட கண்டி மாவட்டத்தில் 1,568 வீடுகள் முற்றிலும் சேதமடைந்ததுடன், 14,111 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. நுவரெலியாவில் 767 வீடுகள் முற்றிலும் சேதமடைந்தது, 3,742 வீடுகள் பகுதியளவு சேதமடைந்தது. புத்தளத்தில் 627 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளது, 20,813 இற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதி அளவு சேதம் அடைந்துள்ளன.

மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கை கொழும்பில், 86,147 குடும்பங்களை சேர்ந்த 330,443 பேர் பாதிக்கப்பட்டனர்.

தேசிய மரண எண்ணிக்கை 640 ஆக உயர்ந்துள்ளது, இதில் கண்டி மாவட்டத்தில் அதிகமாக 234 பேர் உயிரிழந்தனர். தற்போது 82,000க்கும் மேற்பட்டோர் 847 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். (எ)

# 300 மெற்றிக் தொன் கலப்பு கழிவுகள் கண்டியில் தேக்கம்

கண்டி, டிசெ. 15

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட பேரழிவுகளால் கண்டி நகரத்திலும் அதைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் உருவாக்கப்பட்ட 300 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான பிரிக்கப்படாத கலப்புக் கழிவு கள் தற்போது கண்டி நகர சபைக்குச் சொந்தமான கோஹாகொட தேக்கவத்த குப்பைத் தொட்டியில் கொட்டப்பட்டுள்ளதாக கண்டி நகர சபை தெரிவித்துள்ளது.

குவிக்கப்பட்ட பொருட்கள் குப்பை என்று அழைக்கப்பட்டாலும், அவை குப்பை அல்ல, அரிசி, பருப்பு, மா, உருளைக் கிழங்கு, உப்பு, பால் மா உள்ளிட்ட நுகர்வோர் பொருட்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களாகும்.

பிரதான வணிக நிலையங்களில் உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் உருவாகியுள்ள கழிவுப்பொருட்கள் இவ்வாறு குவிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# தேயிலை தொழிற்சாலையின் மீள் புனரமைப்பு பணி தீவிரம்

நுவரெலியா, டிசெ. 15

தீ விபத்துக்குள்ளான லக்சபான தேயிலை தொழிற்சாலையின் மீள் புனரமைப்பு பணிகள் தீவிரமடைந்துள்ளன.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான மஸ்கெலியா- லக்சபான தேயிலை தொழிற்சாலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி நள்ளிரவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் தொழிற்சாலை கடுமையாக சேதமடைந்தது.

இந்த நிலையில், லக்சபான தேயிலை தொழிற்சாலை தீ விபத்து தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தமைக்காக ஜீவன் தொண்டமானுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொண்ட பிரதி பொது முகாமையாளர் துசான் ஹேரத், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் தேயிலை தொழிற்சாலையை முழுமையாக மீள் புனரமைத்து, வழமை போல் தேயிலைத் தூள் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இந்த தீ விபத்து தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, அவர் அன்றைய தினமே பாராளுமன்றத்தில் இது குறித்து கருத்து வெளியிட்டு, குறித்த தேயிலை தொழிற்சாலையை மிக விரைவாக மீள் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பெருந்தோட்ட நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், லக்சபான தேயிலை தொழிற்சாலைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டு, தீ விபத்து தொடர்பாகவும் தற்போது இடம்பெற்று வரும் மீள் புனரமைப்பு பணிகள் குறித்தும் லக்சபான தோட்ட பிரதி பொது முகாமையாளர் துசான் ஹேரத்துடன் கலந்துரையாடி விவரங்களை கேட்டறிந்தார். (எ)

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

பதுளை, டிசெ. 15

பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல் கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன் எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கண்டி மாவட்டத்துக்கும், குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கும் விடுக்கப்பட்டிருந்த சிவப்பு மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது. (எ)

# மலையக பிரதிநிதிகளுடன் இணைந்து செயல்பட தயார்

## மனோ கணேசன் தெரிவிப்பு



கண்டி, டிசெ. 15

மலைநாட்டில், இந்த பேரவலத்துக்கு பின்னர் எழுந்துள்ள, "பாதுகாப்பான வதிவிட காணி" என்ற உரிமை கோரிக்கையை அரசுடன் உரையாடி பெற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலையக பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இணைந்து செயல்பட தயார். நமது மலையக சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூக பிரச்னையை, மனதில் கொண்டு, இவர்களை அடையாளம்கண்டு, இவர்களுக்கு பாதுகாப்பான வதிவிட காணிகளை அரசிடம் கோரி பெறுவோம், என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மனோ கணேசன் எம். பி. மேலும் கூறியுள்ளதாவது,

இதற்கு முன் நடைபெற்ற அவலங்களை விட இந்த முறை அவலம் அவதானத்துக்கு உரியது என நான் நம்புகிறேன். ஏறக்குறைய பெரும்பாலான மலை பகுதிகளிலும் மலை பாறைகள், மலை மேடுகள், தரை நிலங்கள் வெடித்துள்ளன.

இடைவெளிகளில் நீர் வெளியேறுகின்றன. இது இயற்கை அனர்த்தம். சிலர் கூறுவதை போன்று இவற்றை கொங்ரீட் போட்டு ஒட்ட முடி யாது. இவை இயற்கை நில வெடிப்பு.

மலைநாட்டில், மலை உச்சி, மண் சரிவு அபாயங்களை உடனடியாக எதிர் கொள்ளும் பிரிவினர் இருக்கிறார்கள். இவர்களின் பிரச்னை, சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப பிரச்னை. இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கு பாதுகாப்பான வதிவிட காணிகளை அரசிடம் அவசரமாக கோருவோம் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசாமிநகர்...

முழுமை யாக அழிவடைந்தன. அந்தக் குடும் பங்களுக்கு ஒரு வாரத்தில் அரச காணி இனங்காணப்பட்டு, அங்கு குடியேற 50 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி அதிகாரிகளை பணித்துள்ளார்.

"மன்னார் மாவட்டத்தில் 31 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் அவழிவடைந்தன. கால்நடைகளை இழந்தவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

பேரிடரால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மன்னாரை சேர்ந்த 12 ஆயிரம் மீனவர்களுக்கு இரு வாரங்களுக்கான நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி பணித்துள்ளார். இதேபோல, வடக்கு மீனவர்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது. அது மட்டுமல்லாமல் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1900 மீன்பிடி வலைகளை மன்னார் மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு சீன அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## இந்திய...

இந்திய படையினர் கடந்த 8ஆம் திகதி நாட்டுக்கு வந்தனர். இந்தக் குழு நேற்றைய தினம் பணிகளை நிறைவு செய்து நாட்டை விட்டு புறப்பட்டது.

இதேபோன்று, அமெரிக்காவின் சி130 விமானங்கள் இரண்டும் 60 படையினரும் கடந்த 7ஆம் திகதி நாட்டை வந்தடைந்தனர். இவர்கள், கட்டுநாயக்கா, இரத்மலானை விமானப்படை தளங்களிலிருந்து யாழ்ப்பாணம், மத்தள, அம்பாறை, அநுராதபுரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களும் நேற்றைய தினம் தமது பணிகளை நிறைவு செய்து நாட்டுக்கு புறப்பட்டனர்.

இரு நாட்டு படையினரையும் விமானப் படையின் தளபதி எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர, மூத்த விமானப்படை அதிகாரிகள் விமான நிலையத்துக்கு வந்து நன்றி கூறி வழியனுப்பி வைத்தனர். (ஐ)

## பயங்கரவாத...

பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டம், எண். 2026 என்ற பெயரில் இந்த புதிய சட்டம் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ளது.

வேண்டுமென்றோ அல்லது தெரிந்தோ, பயங்கரவாத நிலையைத் தூண்டும் எந்தவொரு செயலும் பொதுமக்களின் எந்தவொரு பிரிவையோ அச்சுறுத்துவது.

இலங்கை அரசாங்கத்தையோ அல்லது வேறு எந்த அரசாங்கத்தையோ அல்லது ஒரு சர்வதேச அமைப்பையோ எந்தவொரு செயலையும் செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ கட்டாயப்படுத்துவது, போரை பரப்புவது, அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவது அல்லது இலங்கை அல்லது வேறு எந்த இறையாண்மை கொண்ட நாட்டின் இறையாண்மையை மீறுவது, போன்ற குற்றங்கள், முன்மொழியப்பட்ட யோசனையில் பயங்கரவாத குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலும், பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாகவோ, பயங்கரவாத வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது பரப்புவதற்காகவோ அல்லது பயிற்சி அளித்ததற்காகவோ குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஒன்றரை கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

நியாயமான சந்தேகத்தின் பேரில் நபர்களை "நிறுத்தி சோதனையிடவும்", சந்தேக நபர்களிடமிருந்து பொருட்களைப் பறிமுதல் செய்யவும் இராணுவத்தினருக்கு அதிகாரம் உள்ளது. ஒரு சந்தேகநபர் காவலில் எடுக்கப்பட்டவுடன் அது குறித்து, 24 மணி நேரத்துக்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்துக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து இரு மாதங்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவைப் பெறவும் இந்த சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது - என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## முகாம்களில்...

மீளக்குடியமர்த்துவதற்கு சில காலம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையில், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளில் ஆபத்து இல்லை என்று கண்டறியப்பட்டால் அவர்களை மீண்டும் அந்த வீடுகளிலேயே குடியேற்ற முடியுமா என்று ஆராய்ந்து அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படும்.

எனினும், வீடுகளை முழுமையாக இழந்தவர்களைக் குடியமர்த்துவதே தற்போதுள்ள பிரதான சவாலாகும். அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள விசேட வேலைத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மண்சரிவு அல்லது அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தவர்களைக் குடியமர்த்துவதற்காக பொருத்தமான அரச காணிகள் குறித்த தகவல்களை வழங்குமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு முகாம்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மற்றும் தொடர்ந்தும் அபாய நிலையில் உள்ள பாடசாலைகளைத் தவிர, ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்களுக்கு ஏதேனும் பிரச்னைகள் இருப்பின், "1904" என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறையிடுமாறும் தெரிவித்துள்ளார். (ஐ)

## பேரிடர் பலி...

காணாமல் போயுள்ளனர் என்றும் அந்த நிலையம் நேற்று வெளியிட்ட தரவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், 22 ஆயிரத்து 638 குடும்பங்களை சேர்ந்த 70 ஆயிரத்து 359 பேர் இன்னமும் 766 பாதுகாப்பான தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

## டித்வா...

பேரிடரால் 4 இலட்சத்து 95 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதுவரை 629 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மேலும் சடலங்களைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சில பிரிவினர் இடர் ஏற்படும் பகுதிகளிலிருந்து வெளியேறுவதை நிராகரித்துள்ளனர். அவர்களை அப்பகுதிகளிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்ற அரசாங்கம் எந்தவொரு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## நாட்டின்...

நிதியம் ஒன்றை அரசாங்கம் உருவாக்கியது.

இந்த நிலையில், இந்த நிதியத்துக்கு இதுவரை 342 கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளது என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூர் வர்த்தகர்கள், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி பங்களிப்பை செய்துள்ளன. சேர்ந்த பணத்தின் பெறுமதி 1.1 கோடி டொலருக்கும் அதிகம்.

வெளிநாட்டு நாணய பங்களிப்புகளின் பெறுமதி 41 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். 40 நாடுகளிலிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இதில் அமெரிக்கா மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## பேரிடர் இறப்பு...

தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் கலந்தாலோசித்து வருகின்றன என்று அறிய வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளே இந்த விடயம் தொடர்பில் உரையாடுகின்றன. முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுனவை சேர்ந்த கட்சிகளின் சட்டத்தரணிகள் இந்தக் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். இந்த சந்திப்பு பீரிஸின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

டித்வா சூறாவளி அண்மையில் நாட்டை தாக்கியது. இதன்போது ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவில் சிக்கி 643 பேர் உயிரிழந்தனர். 183 பேர் காணாமல் போயினர். இந்த நிலையில் இந்த அனர்த்தம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரியவாறு கருத்தில் கொள்ளாது அசமந்தமாகச் செயல்பட்டதாலேயே இவ்வளவு பெரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மக்களின் அடிப்படை உரிமையான உயிர் வாழும் உரிமையைப் பாதுகாப்பதில் அரசாங்கம் தனது கடமையில் இருந்து தவறிவிட்டது என்பதை உயர் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் அவை உரையாடி வருகின்றன.

இந்த நிலைமையை 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் எதிர்க்கட்சிகள் ஒப்பிடுகின்றன. தாக்குதல் குறித்து தேசிய, சர்வதேச மட்டத்தில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் அப்போதிருந்த மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது. இதனால், பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு நீதி கோரி உயர்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதேபோன்ற சூழ்நிலையே தற்போதும் நடந்தது. பேரிடரால் 640இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்றும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. (ஐ)

## பேரிடர் நிவாரண...

வெளியான அந்த ஆசிரியர் தலையங்கத்தில்,

"பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் ஒரு பெரிய இழப்பீட்டுத் தொகுப்பை அறிவித்துள்ளது. மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்வதற்கான பணத்தை வழங்கும் பணி ஏற்கனவே தொடங்கி உள்ளது. மக்களுக்குச் சொந்தமான நிதியையே அரசு செலவிடுகிறது. அந்த நிதி ஜே.வி.பியினுடையது அல்லது தேசிய மக்கள் சக்தியுனுடையது அல்ல. எனவே, அரச நிதியை பொறுப்புடன் வழங்குவது மட்டுமல்லாமல், அவ்வாறு செய்வதாகவும் காட்டப்படவும் வேண்டும்.

வெளிப்படைத்தன்மை என்பது அனைத்து வகையான நிதி முறை கேடுகளுக்கும் மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். அரசாங்க அரசியல்வாதிகள் நிவாரண விநியோக நடவடிக்கைகளில் தலையிடுகின்றனர். தங்கள் ஆதரவாளர்களின் நலனுக்காக நிதியை திருப்பிவிடுகின்றனர் எனவும் முறைப்பாடுகள் ஏராளமாக உள்ளன என்றும் கூறியுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து நேரடியாக விவாதிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## நிவாரண...

தொடர்பான புதிய வழிகாட்டுதல்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

இந்த வழிகாட்டுதல்கள் நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட, பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு ஆகியவற்றிலிருந்து இந்த வழிகாட்டுதல்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிவாரணம் வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்புகளை இந்த வழிகாட்டுதல்கள் குறிப்பிடுவதுடன், பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் உதவிகளையும் விரிவாக சுட்டிக்காட்டியுள்ளன.

## பொறுப்புமிக்க...

உருவாக்குவதே எமது தேவை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சையில் மேல் மாகாணத்தில் முன்னிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நேற்றைய தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இதுவரை, விசேட அதிகாரம் அல்லது பதவிகளை வகிப்பவர்களுக்கு மாத்திரம் நன்மையை பெறுவதற்கு இலகுவாக இருந்த, சாதாரண மக்கள் பயனடைவது கடினமானதும் சிக்கலானதுமான செயல்முறையாக இருந்த ஜனாதிபதி நிதியத்தை, இணையவழியில், தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பிக்கக்கூடிய எளிய முறைமைக்கு கொண்டுவர எமது அரசாங்கம் வழி வகுத்திருக்கின்றது.

இந்தச் செயல்திட்டங்கள் அனைத்தையும் நாம் மேற்கொள்வது நமது மனித வளத்தை தற்போதைய உலகுக்கு ஏற்றவாறு மேம்படுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே. இன்றைய உலகின் சிக்கலான தன்மைகளைப் புரிந்துகொண்டு பயணிக்கக்கூடிய மனித வளத்தை உருவாக்க ஓர் அரசாங்கம் என்ற வகையிலேயே நாம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கிறோம்.

இந்த நோக்கத்திலேயே 2026 ஆம் ஆண்டு முதல் கல்வி முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர விசேட வேலைத் திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். உற்பத்தித்திறன்மிக்க நல்ல பிரஜையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். சுற்றுச்சூழலை நேசிக்கும், அதனைப் பாதுகாப்பதில் முன்னிற்கும், தலைமைத்துவ பண்பு கொண்ட, கருணை மற்றும் கூட்டுமுயற்சி பற்றிய உணர்வுள்ள, ஜனநாயகத்தை மதிக்கும் பொறுப்புமிக்க மனித வளத்தை உருவாக்குவதே எமது தேவையாக இருக்கிறது" என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## குற்றங்களுடன் தொடர்பு 590 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 15

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் 590 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, 27 ஆயிரத்து 786 பேர் பரிசோதிக்கப்பட்டு 590 பேர் கைது செய்யப்பட்டனர். இதில், 14 பேர் குற்றங்களுடன் நேரடி தொடர்புபட்ட சந்தேக நபர்களாவர். அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 233 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 121 பேரும் அடங்குவர்.

மேலும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 27 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 13 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3 ஆயிரத்து 546 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## விபசார விடுதி முற்றுகை 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 15

மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதி சுற்றிவளைக்கப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - கல்கிசையில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

55 வயதான ஆண் ஒருவரும் 20, 24 வயதான பெண்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீட்பு பணியில் ஈடுபட்ட ஐக்கிய அரபு இராச்சிய குழு நாட்டுக்கு புறப்பட்டது



கொழும்பு, டிசெ. 15

பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வருகை தந்த ஐக்கிய அரபு இராச்சிய குழு தனது மனிதாபிமான பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து நாட்டை விட்டு புறப்பட்டுள்ளது.

இந்த அவசர நிவாரண நடவடிக்கை ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதி ஷேக் முகமது பின் சாயித் அல் நஹ்யானின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சிய நிவாரண குழு மொத்தமாக 116 மெற்றிக் தொன் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கியது.

இதில் உணவுப் பொருட்கள், தற்காலிக தங்குமிடங்களுக்கு தேவையான கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கும். இவை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், ஐக்கிய அரபு இராச்சிய தேடுதல் மற்றும் மீட்பு குழு உள்ளூர் அதிகாரிகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு, விசேடகள நடவடிக்கைகள் மூலம் காணாமல் போன 20 பேரின் உடல்களை மீட்டெடுத்தது. அதேபோல், சிறிய காயங்களுக்குள்ளான 8 பேருக்கு சிகிச்சையும் வழங்கப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சிய நிவாரண குழுத் தலைவர், "இலங்கைக்கும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் தொடர்ந்து ஆதரவு வழங்க ஐக்கிய அரபு இராச்சிய உறுதியாக உள்ளது", என தெரிவித்தார். (ஐ)

# அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட சாத்தியமில்லை

### விவசாய அமைச்சர் லால்காந்த

கொழும்பு, டிசெ. 15

பேரிடரால் எதிர்காலத்தில் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியமில்லை என்று விவசாய அமைச்சர் கே. டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

சில அரிசி வகைகளை பயிரிடும் அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்களால் சில சந்தர்ப்பங்களில் அரிசியை இறக்குமதி செய்ய நேரிட்டது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

வெள்ளத்தால் அழிவடைந்த வயல்களில் மீண்டும் பயிர் செய்கையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அநுராதபுரம் - கல்நேவ பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதிலேயே விவசாய அமைச்சர் லால்காந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மீண்டும் எழுவது குறித்த மிகப்பெரும் அனுபவம் விவசாய மக்களுக்கே உள்ளது. விவசாய மக்கள் இந்த அழிவின்போதும் மீண்டும் எழுவார்கள் என்பது குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த அழிவு ஏற்பட்டவுடன், விவசாயிகள் பயிரிடுவார்கள் அதில் பிரச்னையில்லை. ஆனால், விதை நெல் பிரச்னை வரக்கூடும் என்றே எமது மனதில் முதலில் தோன்றியது. ஆனால், விதை நெல் குறித்து எங்கும் பேச்சுகளே இல்லை.

அதனால் எதிர்காலத்தில் அரிசி பிரச்னை வருமென யாராவது நினைத்துக் கொண்டிருந்தால், அவ்வாறான பிரச்னை எதுவும் இல்லை. பயிரிடப்படும் அளவுகளில் உள்ள மாற்றங்கள் காரணமாக சில வகைகளை வெளிநாட்டிலிருந்து கொண்டு வர வேண்டியுள்ளது.

கடந்த நாட்களில் நாம் கீரி சம்பாவை குறிப்பிட்டளவு இறக்குமதி செய்தோம். கீரி சம்பா பயிரிடப்படும் அளவு குறைந்ததாலேயே அதனை இறக்குமதி செய்ய நேரிட்டதே தவிர, நாட்டில் அரிசி தட்டுப்பாடு நிலவுவதால் அல்ல - என்றும் கூறினார். (ஐ)

## பேரிடரால் கண்டியில் 240 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 15

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரிட ரால் கண்டி மாவட்டத்தில் 240 பேர் உயிரிழந்தனர். 75 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையத்தின் கண்டி மாவட்ட பிரதி பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கண்டி மாவட்டத்தில் 54 ஆயிரத்து 988 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 20 ஆயிரத்து 155 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 282 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். 6 ஆயி ரத்து 97 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 456 பேர் 261 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள் ளனர். 12 ஆயிரத்து 974 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 732 பேர் உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

அத்துடன், கண்டி மாவட்டத் தில் 2 ஆயிரத்து 263 வீடுகள் முற்றிலும் அழிந்துள்ளன. 14 ஆயிரத்து 735 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## மின்சார சபைக்கு பேரிடரால் 2 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, டிசெ. 15

பேரிடரால் மின்சார சபைக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் பிரதி முகாமையாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தடைப்பட்ட மின்சார விநியோகத்தில் 99 சதவீதம் தற்போது மீட்டெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பேரிடரால் பல மின்சார நுகர்வோர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர். சேதமடைந்த அனைத்து மின்மாற்றி அமைப்புகளும் தற்போது முழுமையாக மீட்டெடுக்கப்பட்டுள்ளன. பேரிடரால், நாடு முழுவதும் பதிவான மொத்த மின் தடைகளின் எண்ணிக்கை சுமார் 41 இலட்சம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஈடுவைத்த வீட்டை மீட்பதற்காக வழிப்பறியில் ஈடுபட்ட சகோதரர்கள்

கொழும்பு, டிசெ. 15

தாயார் ஈடுவைத்த வீட்டை மீட்பதற்காக வழிப்பறியில் ஈடுபட்ட சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் களுத்துறை - பாணந்துறையை சேர்ந்த 36, 26 வயதுடைய சகோதரர்களாவர்.

இவர்கள் இருவரும் ஏற்கனவே போதைப்பொருள் சார்ந்த குற்றம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இருவரையும் பிணையில் எடுப்பதற்காக அவர்களின் தாயார் வீட்டை ஈடு வைத்துள்ளார். இந்த வீட்டை மீட்பதற்காக இருவரும் வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலங்கையின் மீள்கட்டமைப்புக்கு இந்தியா தலைமை தாங்கவேண்டும்!

### புதுடில்லியில் மொறகொட கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

பேரிடருக்கு பின்னரான இலங்கையை கட்டமைக்க இந்தியா தலைமை ஏற்க வேண்டும் என பாத்ஃபைண்டர் அறக்கட்டளையின் நிறுவுநரும் இந்தியாவுக்கான முன்னாள் தூதுவருமான மிலிந்த மொறகொட முன்மொழிந்துள்ளார்.

அண்மையில், புதுடில்லிக்கு சென்ற மிலிந்த மொறகொட, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி உள்ளிட்ட பலருடன் சந்திப்புகளை மேற்கொண்டார்.

அத்துடன், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் 4ஆவது இந்தியா - ஜப்பான் மன்றத்திலும் அவர் பங்கேற்றார்.

இந்திய மற்றும் ஜப்பானியத் தலைவர்கள் இருதரப்பு மற்றும் மூலோபாய பங்காண்மைகளின் எதிர்காலத்தை கலந்துரையாடி வடிவமைக்கும் தளமாக இந்த மன்றம் விளங்குகிறது.

இந்தநிலையில், இந்தியா- ஜப்பான் மன்றத்தில் மிலிந்த மொறகொட அளித்த தனது சமர்ப்பிப்பில், பேரிடருக்கு பிந்தைய இலங்கையின் புனரமைப்பு, மீட்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை ஏற்க வேண்டும் என்றும் இந்த முயற்சியில் ஜப்பானை ஒரு வியூகப் பங்காளராகச் சேர்க்க வேண்டும் எனவும் மிலிந்த மொறகொட முன்மொழிந்தார்.

இந்த மன்றத்தில், பொருளாதார பாதுகாப்பு, வர்த்தகம், அணுசக்தி, டிஜிற்றல்மயமாக்கல், மூலோபாய கனிமங்கள் மற்றும் முதலீடு உட்பட இந்தியா - ஜப்பான் ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு முக்கியப் பிரச்னைகளைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள வணிகர்களுக்கு நிவாரணம்

**மத்திய வங்கி அறிவிப்பு**

கொழும்பு, டிசெ. 15

பேரிடரால் பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு நிவாரணம் அளிக்க மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு அமைய இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய நிவாரணங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வருமானம் அல்லது வணிகம் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் பயனடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து எழுத்து மூலமான பாதிப்புகள் குறித்த விவரங்கள் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டு எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதியளவில் வர்த்தக வங்கிகளால் வழங்கப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட கடன் வாங்குபவர்களின் மூலதனம் மற்றும் அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடன் வசதி வாய்ப்புக்களுக்கான வட்டியை மீளச் செலுத்துவதற்கு 3 முதல் 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, வட்டி இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியினில் உரிமம் பெற்ற வங்கிகள், ஏற்கனவே ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட அதிக வட்டியினை வசூலிக்கக்கூடாது எனவும் கோரப்பட்டுள்ளது. அத்துடன், எந்தவொரு கடன் மறுசீரமைப்பு மற்றும் மறுசீரமைப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, கடன் பெறுபவர்களுக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும் எனவும் பணித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.